திரு. கக்கன் போலீஸ் அமைச்சராக இருந்த காலத்தில், ஏற்றுக்கொள்ளப் பட்டது. அந்த வகையில்தான் இந்த மாற்றத்தை இந்த அரசும் ஏற்றுக் கொண்டது.

திரு. என். ஆர். தியாகராஜன் : ஓடும்போது குல்லாயை பிடித்துக் கொண்டு ஓடவேண்டிய கஷ்ட நிலையில்லாமல் அமைப்பாக இருந்து ஓடுவதற்கு தகுந்தவாறு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : போலீஸ் அதிகாரிகளைப் பொறுத்துத்தான் இப்போது தொப்பி மாற்றம் செய்யப்படுகிறது. போலீஸ்காரர்களுக்கு தொப்பி மாற்றமில்லை. அதிகாரிகள் ஓடவேண்டிய நிலை வந்தால் விழாமல் இருப்பதற்கு ஒரு ரிப்பன் கட்டப்படுகிறது.

திரு என். வி. நடராசன் : தலைவரவர்களே, எத்தனை போலீஸ் அதிகாரிகளுக்கு இந்த மாதிரியான மாற்றம் செய்யப்படுகிறது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதிகாரிகளைப் பொறுத்தவரை, இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர், அஸிஸ்டண்ட் சப்-இன்ஸ்பெக்டர், ரிசர்வ் இன்ஸ்பெக்டர், ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர், ரிசர்வ் அஸிஸ்டண்ட் சப்-இன்ஸ்பெக்டர், ஆகிய 1,868 பேர்களுக்கும், சுபேதார்-மேஜர், சுபேதார், ஜமேதார் ஆகிய (Reserve Armed Police) 495 பேர்களுக்கும் கொடுக்க பழைய அரசு தீர்மானித்திருந்தது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவர்களோடு சூப்பிரண்டன்ட் ஆப் போலீஸ், டெபுடி சூப்பிரண்டன்ட் ஆப் போலீஸ், அஸிஸ்டண்ட் சூப்பிரண்டன்ட் ஆப் போலீஸ் ஆகியவர்களுக்கும் சேர்த்து 90 பேர்களுக்கு தொப்பி மாற்றம் செய்யலாம் என்று கூறிய கருத்து முடிவாக இப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

Police shorthand writers

160-C *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether police shorthand writers are sent for the political public meetings ; and

(*b*) whether the police shorthand writers are sent to the meetings conducted by all the political parties ?

போலீஸ் சுருக்கெழுத்தாளர்கள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசியல் பொதுக் கூட்டங்களுக்கு போலீஸ் சுருக்கெழுத் தாளர்கள் அனுப்பப்படுகிறார்களா ?

(இ) எல்லா கட்சியினர் கூட்டங்களுக்கும் போலீஸ் சுருக்கெழுத் தாளர்கள் அனுப்பப்படுகிறார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (on behalf of the Hon. the Chief Minister) : (அ) & (இ) ஆளும் கட்சியைத் தவிர மற்ற கட்சியின் கூட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் உத்தரவின் பேரில் சுருக்கெழுத்தாளர்கள் அனுப்பப்படுகிறார்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, ஆரம்பத்தில் போலீஸ் சுருக்கெழுத்தாளர்களை எந்த கூட்டங்களுக்கும் அனுப்பப் போவதில்லை என்றெல்லாம் கூறப்பட்டது. அது உண்மையா ? இப்போது சுருக்கெழுத்தாளர்கள் வருவது மாத்திரமல்ல. அரசியல் வாதிகளுக்கு வரும் கடிதங்கள் கூட போஸ்ட் ஆபீஸில் திறந்து பார்க்கப்படுகிறது. எனக்கு வரும் கடிதங்கள் அவ்விதம் பார்க்கப்படுகிறது. நான் எழுதும் கடிதங்களும் பார்க்கப்படுகின்றன. அதுமட்டுமல்ல, போலீஸ் இன்ஸ்-

2nd March 1968]

பெக்டர், சி.ஐ.டி. ஒருவர் என் அறைக்கு முன்னுலேயே சுற்றிக்கொண் டிருக்கிருர் ; போகு மிடங்களுக் கெல்லாம் வந்துகொண்டிருக்கிருர். இது அரசின் கொள்கையா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : தலைவரவர்களே, கடிதங்களைப் பிரித்துப் பார்ப்பதும், உறுப்பினரைத் தொடர்ந்து துப்பறிவாளர்கள் வருவதும், இந்தத் தொடக்கக் கேள்விக்கு தொடர்புடைய கேள்வி அல்ல. ஆனால், அவர்கள் ஆரம்பத்திலே இப்படிப்பட்ட அதிகாரிகள், சுருக்கெழுத்தாளர்கள் அனுப்பப்பட மாட்டார்கள் என்று சொல்லப்பட்டதே, பிறகு ஏன் அனுப்பப்படுகிறது என்று கேட்டார்கள். ஏழு மாத காலம் வரை அப்படி அனுப்பாமல் தான் இருந்தது. அதற்குப் பிறகு கூட, சில அரசியல் கட்சி கூட்டங்களில் சற்றுத் தரக்குறைவாக, ஆட்சேபனையாக பல பேச்சுக்கள் பேசப்படுவதாக செய்திகள் வந்த பிறகு, அப்போதும் கூட சுருக்கெழுத்தாளர்களை அனுப்பாமல் ஆங்காங்குள்ள உயர் மட்ட அதிகாரிகளே அப்படிப்பட்ட பேச்சாளர்களை வரவழைத்து அவர்களிடம் எச்சரிக்கை செய்து அனுப்பினுர்கள். அதுவும் உற்ற பயனைக் கொடுக்காத காரணத்தால் இப்போது சுருக்கெழுத்தாளர்கள் அனுப்பப்படுகிருர்கள். இவர்களை அனுப்புவது என்று அரசு முடிவு செய்து, 9-10-1967 முதல் அமுலில் இது இருந்து வருகிறது.

திரு. கே. ராமதாஸ் : தலைவரவர்களே, எதிர்க்கட்சிகள் மட்டும்தான் தரக்குறைவாக பேசுகிருர்களா ? ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தரக் குறைவாக பேசுவது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : தலைவரவர்களே, இரண்டு கட்சிகளின் பத்திரிகைகளையும் எடுத்து ஒரு பொது கமிட்டி நியமித்து ஓராண்டில் வந்திருக்கிற செய்திகளைப் படித்துப் பார்த்தால் எதில் தரக் குறைவான செய்திகள் வந்துள்ளது என்பதை நாம் காண முடியும். ஆகையால் ஆளும் கட்சியின் கூட்டங்களுக்கும் அனுப்ப வேண்டுமென்று நண்பர்கள் விரும்புவார்களானுல், இந்த சட்டமன்றமும், சட்டப் பேரவையும் அப்படி கருதுவார்களானுல், ஆளும் கட்சியாக இருக்கிற நாங்கள் அதை மிகுந்த விருப்பத்தோடு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிருேம். ஆனுல் இதற்கு முன்னுல் இருந்த முதல் அமைச்சர் அவர்கள் இந்த யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திரு. எம். எத்திராஜுலு : தலைவரவர்களே, ஆளும் கட்சியின் கூட்டங்களுக்கு சுருக்கெழுத்தாளர்கள் அனுப்பப்படுவதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். எதிர்க்கட்சிகள் பற்றி, குறிப்பாக காங்கிரஸ் கட்சி பற்றி ஆளும் கட்சிக்காரர்கள் பேசுவதைப் பற்றி சுருக்கெழுத்தாளர்கள் ஏதாவது எழுதி ஆளும் கட்சி அமைச்சர்களுக்கு அனுப்பியிருக்கிருர்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : அனுப்பப்படுகிறது. ஆனுல் அவைகள் அலட்சியம் செய்யப்படுகின்றன.

Expenditure on account of Gazetted Personal Assistants

*160-D *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the total expenditure so far incurred towards the pay, Class I Special Pay and Dearness allowance, etc., in respect of the Gazetted Personal Assistants appointed to work under Ministers ; and

(*b*) the Ministers to whom the Gazetted Personal Assistants are appointed ?